**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம் இராமநாதபுரம்**

**முன்னிலை திரு.S.B. சுஜித், B.A. B.L. (Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராமேஸ்வரம்**
**நீதித்துறை நடுவர் எண்.2(முகூபொ),**
**இராமநாதபுரம்.**

2026 ம் வருடம் மார்ச் திங்கள் 12-ம் நாள் வியாழக்கிழமை

**Cr.M.P. No. 264/2026**

**CNR No. TNRM02-000787-2026**

நானி (எ) ஞானபிரகாஷ்,
த/பெ. கோவிந்தராஜ்
அகஸ்தியர்கூட்டம்,
உச்சிப்புளி,
இராமநாதபுரம் . .... மனுதாரர்/எதிரி

எதிர்

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
உச்சிப்புளி காவல் நிலையம்,
இராமநாதபுரம்
குற்ற எண். 30/2026 .... எதிர்மனுதாரர்/குற்றம் முறையிடுவோர்

**உத்தரவு**

**1.** மனுதாரர் தனது மனுவில் மனுதாரர் மீது குற்றமுறையிடுவோரால் பிரிவுகள் 189(2), 296(பி), 115(2), 118(1), 351(3), 303(2) BNS ன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் சார்பாக சமூகம் நீதிமன்றத்தில் பிணைமனு தாக்கல் செய்யப்பட்டு அவை அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் குற்றமுறையிடுவோர் காவல் நிலையத்தில் காலை 10 மணிக்கு ஆஜராகி மறு உத்தரவு வரும் வரை கையொப்பம் செய்து வரவேண்டும் என்று கடந்த 13.02.2026 ம் தேதி Cr.M.P. No. 162/2026 ன் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

2. அதன் அடிப்படையில் மனுதாரர்/எதிரி 16.02.2026ம் தேதி இந்நீதிமன்றத்தில் ஜாமீன்தாரர்களை ஆஜர்படுத்தி கடந்த 18.02.2026ம் தேதி முதல் இன்று வரை தொடர்ந்து கையொப்பம் செய்து வந்துள்ளார் என்றும் மேலும் எதிரி தினமும் கூலி வேலை செய்து குடும்பத்தை நடந்தி வருவதாகவும் உடல்நலம் பாதிக்கப்பட்டு இருப்பதாலும் தொடர்ந்து கையொப்பம் செய்ய இயலாத சூழ்நிலையில் இருந்து வருகிறார் என்றும் மனுதாரர்/எதிரி மீதுள்ள நிபந்தனையை ரத்து செய்து உத்தரவிட வேண்டுமென்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு பதில் பெறப்பட்டது அந்த பதில் மனுவில் நீதிமன்ற உத்தரவுப்படி நீதிமன்றக்காவலில் இருந்தவர் ஜாமீனில் வெளியே வந்து 18.02.2026ம் தேதி முதல் 12.03.2026 வரை மொத்தம் 23 நாட்கள் காவல்நிலையத்தில் கையொப்பமிட்டுள்ளார் என்றும் எதிரிக்கு கையொப்பமிட தளர்வு கொடுக்கும் பட்சத்தில் மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடும் என்பதாலும் காவல்துறையினர் புலன் விசாரணைக்கு அழைக்கும் போது எதிரி ஆஜராகாமல் தவிர்க்க கூடும் என்பதாலும் நீதிமன்றத்தில் அழைப்பாணை வரும் போது எதிரி ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும் பிணை தளர்வு வழங்க கடுமையாக ஆட்சேபணை செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி நீதிமன்ற நிபந்தனையின் பேரில் கடந்த 18.02.2026ம் தேதி முதல் 12.03.2026 வரை மொத்தம் 23 நாட்கள் காவல்நிலையத்தில் கையொப்பமிட்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேலும் காவல்துறையின் ஆட்சேபனை கருத்தில் கொண்டு எதிரி இரண்டு வாரத்திற்கு ஒரு முறை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆஜராகி பத்து வாரங்கள் கையொப்பம் இட வேண்டுமென்று நிபந்தனையுடன் மனுதாரரால் தாக்கல்

செய்யப்பட்டுள்ள மனு பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் வருடம் மார்ச் 12-ம் நாள் வியாழக்கிழமை அவையறிய பகரப்பட்டது.

SUJITH
Digitally signed by SUJITH
Date: 2026.03.12 16:57:44 +0530

நீதித்துறை நடுவர் எண்.II (FAC)
இராமநாதபுரம்.